NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 17 January 2023

# பாதுகாப்பு தரும் பூஸ்டர் தடுப்பூசி

எம்ஆர்என்ஏ வகை பூஸ்டர் தடுப்பூசிகளைப் போட்டுக்கொண்டுள்ள சிங்கப்பூர்வாசிகள், கடுமையான கொவிட்–19 கிருமித்தொற்றுக்கு எதிரான பாதுகாப்பைப் பெற்றுள்ளார்கள். கிராக்கென் போன்ற புதிய கிருமி வகைகள் தொற்றியபோதும் தடுப்பூசிகள் அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதாக டியூக்–என்யூஎஸ் மருத்துவக் கல்லூரியில் புதிய தொற்றுநோய் துறையைச் சேர்ந்த பேராசிரியர் ஊய் எங் இயோங் கூறியுள்ளார்.

மற்ற பல நாடுகள் உடலில் பிறபொருள் எதிரிகளை அழித்து தொற்று ஏற்படாமல் தடுப்பதில் கவனம் செலுத்தி வருகின்றன. ஆனால் அந்த தடுப்பாற்றல் ஒரு சில மாதங்களில் குறைந்துவிடுகிறது. கொவிட்–19 அன்றாட வாழ்வில் ஒரு பகுதியாகி விட்டதால், தொற்றைத் தடுப்பதைவிட கடும் நோய்களையும் மரணத்தையும் தடுப்பதே முக்கியம் என்றார் டாக்டர் ஊய்.

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.